சுருக்கம்

நினைவகம் – தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பழவந்தான்கட்டளை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கும்பகோணம் மகாமகம் கலையரங்கத்தை மேம்படுத்தி, அதனை பல்நோக்கு மண்டபமாக மாற்றம் செய்தல் – நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நினைவகங்கள்)த் துறை

அரசு ஆணை (நிலை) எண் 314

நாள் 12.12.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
கார்த்திகை 26
படிக்கப்பட்டவை:

1. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் 24979/ ஏ1/2004, நாள் 07.07.2011.
2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கடித எண் AEE/T5/AE–1/ F.40915/2008, நாள் 08.09.2011)

ஆணை:

2011–2012–ம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கையின் விவாதத்தின் போது, மாண்புமிகு (செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்)த் துறை அமைச்சர் அவர்கள் கும்பகோணத்தில் உருவாக்கப்பட்ட மகாமகம் கலையரங்கம் ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்குப் பயன்பாட்டிற்காக மேம்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்.

2. முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் மற்றும் நகரத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் திருவிழா மிக விமரிசையாக கொண்டாடப்படும் திருவிழாக்களில் ஒன்றாகும் என்றும், மேற்படி மகாமக திருவிழாவிற்கு வருகைப் புரியும் யாத்திரிகர்கள் தங்குவதற்கும் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் நடத்துவதற்கும் கும்பகோணம் நகரத்தின் மைய பகுதியில் மகாமகம் குளத்தின் அருகில் ஒரு பிரம்மாண்டமான கலையரங்கம் கட்டுவதற்காக புல எண் 2035/1 மற்றும் பல எண்களில் 145129 ச.அடி (அ) 3.33 ஏக்கர் பரப்பளவு இடத்தில் 2004–ம் ஆண்டு சுமார் ரூ.165.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 1000 பேர் அமர்ந்து பார்க்கத்தக்க அளவில் பிரம்மாண்டமான கலையரங்கம் கட்டப்பட்டது என்றும், மேற்காணும் கலையரங்க கட்டிடத்தைப் பராமரிக்கப்படுவதற்கு அலுவலர்கள் யாரும் நியமனம் செய்யப்படாததால் கட்டிடம் பராமரிப்பின்றி

த.பி.பா.

பழுதடைந்துள்ளது என்றும், இந்த கலையரங்கை மீண்டும் புதுப்பித்து நவீனமயமாக்கி மகாமகம் திருவிழாவிற்கு மட்டுமல்லாமல் அன்றாடம் பொது மக்கள் பயன்படுத்த தக்க வகையில் இக்கலையரங்கில் திருமண நிகழ்ச்சிகள், சுபநிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், நாடக விழாக்கள் மற்றும் மாநாடுகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தினால் அதன் மூலம் அரசுக்கு வருவாய் ஏற்படும் என்றும், கட்டிடமும் நல்ல முறையில் பராமரிக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு கலையரங்கத்தை புதிதாக நவீனப்படுத்தி தற்போதுள்ள கலையரங்கில் சில அடிப்படை வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்து, ரூ.69.50 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டை (கலையரங்கத்தை நவீனப்படுத்த ரூ.63.00 இலட்சம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.6.50 இலட்சம்) அனுப்பி வைத்து அத்திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

3. இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) சென்னை மண்டலம், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கும்பகோணம் மகாமகம் கலையரங்கத்தை மேம்படுத்தவும், அதனை பல்நோக்கு மண்டபமாக மாற்ற பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 2011–2012 ஆண்டிற்கான தளபரப்பு விலைவிகிதப் பட்டியலின்படி ரூ.69.50 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடுகளை (கலையரங்கத்தை நவீனப்படுத்த ரூ.63.00 இலட்சம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.6.50 இலட்சம்) அனுப்பி வைத்து அவற்றிற்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பழவந்தான்கட்டளை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கும்பகோணம் மகாமகம் கலையரங்கத்தை மேம்படுத்தவும், அதனை பல்நோக்கு மண்டபமாக மாற்றும் பணிகள் தொடர்பாக, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) சென்னை மண்டலம், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் கோரும் தொகையாக ரூ.69.50 இலட்சத்திற்கு பதிலாக மேற்படி செலவினத்தை ரூ.63.00 இலட்சம் என்ற அளவில் வரையறுக்கலாம் என்று உத்தேசித்து, அதன்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கும்பகோணம் மகாமகம் கலையரங்கத்தை மேம்படுத்தவும், அதனை பல்நோக்கு மண்டபமாக மாற்றும் பணிகளுக்காக ரூ.63,00,000/–க்கு (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட செலவினத்தில் பின்வரும் விவரப்படியான பணிகளை ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள ஏதுவாக நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் |
|---|---|
| 1. | கலையரங்கத்தைச் சுற்றி பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர்/ காம்பவுண்ட் சுவர் சுமார் 205 மீட்டர் நீளத்திற்கு புதிதாக கட்டப்பட வேண்டும். |
| 2. | அதிநவீன வசதிகளுடன் சமையலறை அமைக்கப்பட வேண்டும். |

….3…

| | |
|---|---|
| 3. | சுமார் 1,000 பேர் அமரக்கூடிய வகையில் உணவருந்தும் கூடம், மேசை மற்றும் நாற்காலிகளுடன் அமைக்கப்பட வேண்டும் |
| 4. | குடிநீர் வசதி தங்குதடையின்றி கிடைக்க ஏதுவாக குடிநீர் இணைப்பு மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்து கீழ்நிலைத் தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட வேண்டும். |
| 5. | நவீன குளியலறை மற்றும் கழிவறைகள் சீர்செய்து அமைக்கப்பட வேண்டும். |
| 6. | மணமக்கள் தங்குவதற்கான குளிர்சாதன வசதிகளுடன் கூடிய அறைகள் மற்றும் உறவினர்கள் தங்குவதற்கான அறைகள் அமைத்திட வேண்டும். |
| 7. | வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகனங்கள் வந்து செல்வதற்கான அணுகு சாலைகள் அமைக்கப்பட வேண்டும். |
| 8. | மின் இணைப்புகள் நவீனப்படுத்திட வேண்டும் மற்றும் மின்சாரம் இல்லாத நேரங்களில் பயன்படுத்துவதற்காக (மின் ஆக்கி) ஜெனரேட்டர் புதிதாக அமைக்கப்பட வேண்டும். |

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “4220 செய்தி விளம்பரம் குறித்த மூலதனச் செலவு – 60 ஏனையவை – 101 கட்டிடங்கள் – I திட்டத்தில் சேராதது – AC கட்டடங்கள் – 16 பெரும் பணிகள்”
> (துதொகு 4220 60 101 AC 1603)”

6. மேலும், மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் “ஒரு புது துணைப் பணித் திட்டம்” குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொது–1)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன் பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது–1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2011–2012ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–1) (பொதுப்பணி)/(துவஅநி(ம)செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை சென்னை – 5 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

த.பி.பா.

8. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சாரா எண் 237/JS (Per)/தவ,அநி(ம)செய்தி) 2011, நாள் 08.12.2011 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண் 1043 (ஆயிரத்து நாற்பத்து மூன்று) –ன் மூலம் இசைவளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்

பெறுநர்:
தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
பொதுப்பணித் துறை, சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை–9
கண்காணிப்புப் பொறியாளர், கட்டடக் கட்டுமானக் கோட்டம்,
பொதுப்பணித்துறை, சென்னை–5.
செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (கட்டடம் மற்றும்
பராமரிப்பு கோட்டம்), தஞ்சாவூர் மாவட்டம்.
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
(கட்டடம் மற்றும் பராமரிப்பு), தஞ்சாவூர் மாவட்டம்.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர் மாவட்டம்.
கருவூல அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்:</u>
நிதி (வ.செ.பொ.1/ வ.செ.பொ.2/பொ.ப.1/
தவ,அநி(ம)செய்தித் துறை)த் துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை 9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு செய்தித் மற்றும் சிறப்பு திட்டகள் செயலாக்கத் துறை
அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தி (கணக்கு/
வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்